**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**முன்னிலை : திருமதி. எஸ்.பிரவீனா, M.A., L.L.M.,**
**நீதித்துறை நடுவர், ஒட்டன்சத்திரம்.**
**2026 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் நாள் புதன்கிழமை**

**S.T.C.No.908/2025**

அரசுக்காக
உணவு பாதுகாப்பு அலுவலர்,
உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை,
குறியீடு எண்.040, ஆத்துூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் வட்டாரம்,
அரசு சமுதாய சுகாதார மைய வளாகம்,
சின்னாளபட்டி, திண்டுக்கல் மாவட்டம்–624301. ... புகார்தாரர்

---எதிர்---

N.மைக்கேல் காளிஸ்டர் ராஜா (45/2025)
த.பெ.நிக்கோலஸ் நாடார்,
3/120, கிழக்கு தெரு,
கரியகவுண்டன்பட்டி, நீலமலைகோட்டை,
திண்டுக்கல் மாவட்டம்–624619. எதிரி(A1)/ குற்றஞ்சாட்டப்பட்டவர்

இவ்வழக்கு 05.07.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 20.05.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றச்சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.பாலசந்திரன்,பி.ஏ.,எல்., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் நாளது தேதி வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

1. கடந்த 01.02.2025 ஆம் தேதி உணவு பாதுகாப்பு அலுவலர், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், திண்டுக்கல் என்பவர் கரட்டுபட்டி, போலியமனூர், ஸ்ரீராமபுரம், அரசு நடுநிலைப்பள்ளி அருகில், S.K.S.மாளிகை கடை முன்பு, நின்று கொண்டிருந்த 1–ம் எதிரியை விசாரித்ததில் அவர் தன் பெயர் திரு.N.மைக்கேல் காளிஸ்டர் ராஜா என்று கூறினார். அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த TN 10 J 1780 என்ற நான்கு சக்கர வாகனத்தை பற்றி கேட்டதற்கு அது எனக்கு சொந்தமான

வாகனம் என்றார். அந்த நான்கு சக்கர வாகனத்தை ஆய்வு செய்தபோது, அதில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை கலந்த உணவுப்பொருளை மனித நுகர்வுக்கென பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டு வைத்திருந்த Tobacco என்ற புகையிலை கலந்த உணவுப்பொருளை பதுக்கி வைத்து இருந்ததை ஆய்விற்கு அனுப்பியபோது, அது "பாதுகாப்பற்றது" (UNSAFE) என்று பகுப்பாய்வாளரிடம் இருந்து அறிக்கை பெறப்பட்டதாலும், பாதுகாப்பற்ற பொருளை நுகர்வுக்காக வைத்திருந்ததாலும், உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006–ன் படி, தண்டனைப் பிரிவு 58 மற்றும் பிரிவு 59(i) ன் கீழ் குற்றம் என்றும், உணவு பாதுகாப்பு அலுவலர், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், திண்டுக்கல் என்பவரால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2. பின்னர் எதிரிக்கு புகார் நகலுடன் இணைத்து 06.10.2025 ஆம் தேதி அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி 20.05.2026 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்குரைஞர் திரு.T.பாலசந்திரன்,பி.ஏ.,எல்., அவர்கள் எதிரிக்கு வக்காலத்து தாக்கல் செய்தார்.

3. எனவே, வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலை வைத்தும் எதிரி மீது சட்டப்பிரிவு உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006–ன் பிரிவு 58 மற்றும் பிரிவு 59(i) ன் ஆகிய பிரிவுகளின் படி குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

4. எதிரிக்கு வழங்கக் கூடிய தண்டனை குறித்து கேட்டபோது, குறைந்தபட்ச அபராதம் விதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். எதிரியின் வேண்டுகோளையும், உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை என கூறியுள்ளதையும், முதல் குற்றம் என்பதையும் கருத்தில் கொண்டு குறைந்தபட்ச அபராதம் விதிக்க இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

5. முடிவாக, எதிரி மீது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006–ன் பிரிவு 58 மற்றும் பிரிவு 59(i) ன் ஆகிய பிரிவுகளின் கீழ் எதிரி தண்டிக்கத்தக்க குற்றவாளி என முடிவு செய்து, எதிரிக்கு நீதிமன்றம் கலையும் வரை சிறை தண்டனை விதித்தும், உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 பிரிவு 58–ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.10,000/– அபராதம் விதித்தும், உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 பிரிவு 59 (i)–ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.5,000/– அபராதம் விதித்தும், அபராதத் தொகை

கட்டத் தவறினால், 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், எதிரி மீதான தண்டனை தீர்ப்பு குறித்து ஏதேனும் ஒரு தினசரி தமிழ் நாளிதழில் எதிரியின் செலவில் விளம்பரம் செய்து நாளிதழ் நகலை 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உணவு பாதுகாப்பு அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. (மொத்த அபராதத் தொகை ரூ.15,000/-)

6. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் ஒப்படைக்கவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.05.20 17:39:49 +0530

நீதித்துறை நடுவர்,
ஒட்டன்சத்திரம்.

<u>குறிப்பு :</u>

1. வழக்கின் முடிவு எதிரி மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர், ஒட்டன்சத்திரம் வட்டாரம், திண்டுக்கல் அலுவலருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. எதிரியிடம் அபராதத் தொகை மொத்தம் ரூ.15,000/- வசூலிக்கப்பட்டது.
3. எதிரிக்கு இவ்வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.05.20 17:39:55 +0530

நீதித்துறை நடுவர்,
ஒட்டன்சத்திரம்.